بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 09/01/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪ வக்ஃபே ஜதீத் சந்தாவின் 68 ஆவது ஆண்டில் ஜமாஅத் மக்கள் முன்வைத்த பொருள் தியாகங்கள் பற்றிய குறிப்பு மற்றும் 69 ஆவது ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰى تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ ۬ؕ وَمَا تُنۡفِقُوۡا مِنۡ شَيۡءٍ فَإِنَّ اللّٰهَ بِهٖ عَلِيۡمٌ

இந்த வசனத்தின் பொருள்: நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெறமுடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். (3:93)

இதன் விளக்கவுரையில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: திருக்குர்ஆனில் சூரா அல்பகராவில் முதல் ருகூவு துவங்கும் இடத்தில் இறையச்சமுடையவர்கள் தொடர்பாக وَمِمَّا رَزَقۡنٰهُمۡ يُنۡفِقُوۡنَ என்று கூறியுள்ளான். அதாவது, அல்லாஹ் வழங்கியவற்றிலிருந்து அவர்கள் செலவு செய்கின்றார்கள். இது முதல் ருகூவுடைய விஷயமாகும். பிறகு, இந்த சூராவில் பல இடங்களில் இறைவழியில் செலவு செய்யப் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆக எப்பொழுது வரை நீங்கள் செல்வத்திலிருந்து செலவு செய்யவில்லையோ அதுவரை உங்களால் முழுமையான நன்மையினைப் பெறமுடியாது. என்னுடைய பார்வையில் مِمَّا تُحِبُّوۡنَ என்பதன் பொருள் செல்வமாகும். ஏனென்றால், அல்லாஹ் اِنَّهٗ لِحُبِّ الۡخَيۡرِ لَشَدِيۡدٌ ؕ என்று கூறுகின்றான். அதாவது, மனிதனுக்கு செல்வம் மிகவும் விருப்பத்துக்குரியதாகும். எனவே உண்மையான நன்மையைப் பெற உங்களுடைய விருப்பமான செல்வத்திலிருந்து செலவு செய்து கொண்டேயிருப்பது அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் பல இடங்களில் இதற்கு விளக்கம் அளித்துள்ளார்கள். ஒரு இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: வீணான, பயனற்ற பொருளை செலவு செய்து எவரும் நன்மை செய்ததாக வாதிக்க முடியாது. நன்மைக்கான வாயில் குறுகலானதாக இருக்கின்றது. எனவே பயனற்ற பொருட்களை செலவு செய்வதால் யாரும் அதில் நுழைய முடியாது என்ற விஷயத்தை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். துன்பத்தை ஏற்க விரும்பவில்லை என்றால், உண்மையான நன்மையை பெற விரும்பவில்லை என்றால், பிறகு எவ்வாறு உங்களால் வெற்றி பெற முடியும்? எவ்வாறு உங்களால் நோக்கத்தை அடைய முடியும்?

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கவனமூட்டியவாறு கூறினார்கள்:* ஆக எந்த மக்கள் சில வேளைகளில் நன்றாக சம்பாதிக்கின்றார்களோ, ஆனால் தம்முடைய பொருள் தியாகங்களில், சாதாரண நடுத்தர வர்கத்தைச் சேர்ந்த சம்பாதிக்கக்கூடிய ஒரு அஹ்மதி இருக்க வேண்டிய அந்தத் தரத்தில் இருப்பதில்லையோ அப்படிப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: எந்த பொருளை நீங்கள் நேசிக்கின்றீர்களோ அதை அவனுடைய வழியில் செலவு செய்யுங்கள். இதுவே உண்மையான தியாகம் ஆகும். அப்பொழுதுதான் நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக ஆக முடியும். மேலும் அவனுடைய அருட்களுக்கு வாரிசாக முடியும். அல்லாஹ் ஓரிரு இடங்களில் மட்டுமல்லாமல், திருக்குர்ஆனில் பல இடங்களில் இறைவழியில் செலவு செய்யக் கட்டளையிட்டுள்ளான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* அல்லாஹ்வுடைய அருளினால் ஜமாஅத்தின் பெரும்பாலான மக்கள் பொருள் தியாகத்தில் மிகவும் மகிழ்ச்சியோடு பங்கேற்கின்றார்கள். ஆனால் தயக்கம் கொள்கின்ற சிலரும் இருக்கின்றார்கள். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது அவசியமாகும் என்ற அல்லாஹ்வின் கட்டளையை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அதிகம் சம்பாதிக்கக்கூடியவர்கள் சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால், திட்டங்களில் பங்கெடுகின்றார்கள். மேலும், மிகவும் அதிகதிகமாக பங்கேற்கின்றார்கள். ஆனால் இங்கு இடைச் செருகலாக இதையும் கூறிவிடுகின்றேன், அவர்கள் தங்களுடைய ஹிஸ்ஸா ஆமத் போன்ற (கட்டாயச்) சந்தாக்களை விகிதாச்சாரப்படி செலுத்துவதில்லை. இதில் அவர்கள் முறையாக இருப்பதில்லை. எனவே, அவர்கள் தங்களை சுயஆய்வு செய்ய வேண்டும்.

ஹதீஸ்களிலும் இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல இடங்களில் பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்று நமக்கு அறிவுரை கூறியிருக்கின்றார்கள். ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு கிடைக்கின்றது. இது ஹதீஸே குத்ஸியாகும். அதாவது, நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் கூறியதாகக் கூறினார்கள்:- ஆதமின் மகனே! நீ உன்னுடைய கருவூலத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதி அடைந்து விடு. அதை நெருப்பு பற்றும் அபாயமும் இல்லை. தண்ணீரில் மூழ்குமோ என்ற அச்சமும் இல்லை. மேலும், திருடன் எவனாவது திருடி விடுவானா என்கின்ற அச்சமும் இல்லை. என்னிடம் வைக்கப்படுகின்ற கருவூலத்தை, அது உனக்கு அதிகமாகத் தேவைப்படுகின்ற அந்த நாளில் முழுவதுமாகத் திருப்பி தருவேன்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். இன்று பெரும்பாலான அஹ்மதிகள் இவ்விஷயத்தை புரிந்திருக்கின்றார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் எண்ணற்ற செல்வங்களை செலவு செய்கின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்திலும் இந்த செலவழித்தலின் இப்படிப்பட்ட உதாரணங்கள் இருக்கின்றன. இன்னும் கூறுவதாயின், இவற்றைக் கண்டு அன்னார் ஒருமுறை கூறினார்கள்: “இந்த ஏழை மக்கள் எவ்வாறு மார்க்கத்திற்காக இந்த அளவு தியாகங்கள் செய்கின்றார்கள் என்று எனக்கு ஆச்சரியம் ஏற்படுகின்றது.” இன்றும் இதே நிலைதான் இருக்கின்றது. நான் பார்த்துள்ளேன், பெரும்பாலான ஏழைகள் அல்லது நடுத்தர வர்க சம்பாதிக்கக்கூடியவர்கள் பெரும் பெரும் தியாகங்களை செய்கின்றார்கள். ஏனென்றால் அல்லாஹ் இச்செல்வத்தை நமக்கு திருப்பி தருவான் அல்லது நாம் அல்லாஹ்வின் அருள்களுக்கு உரியவர்கள் ஆவோம் என்கின்ற புரிதல் அவர்களுக்கு இருக்கின்றது.

எவ்வாறு? இதை அல்லாஹ்வே நன்கறிவான். இவ்வுலகத்திலும் மறுமையிலும் (வழங்குவான்). உண்மையான விஷயம் என்னவென்றால், மறுமையில் அல்லாஹ் அதைத் திருப்பித் தருவான். இதற்கான நன்மையில் சேர்த்து விடுவான். மேலும், இந்தத் தியாகங்கள் அவர்களுடைய படித்தரம் உயரக் காரணமாக அமையும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "நாம் இறையச்சம் மற்றும் தூய்மையில் எந்த அளவு முன்னேறி உள்ளோம் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். இதனுடைய அளவுகோல் திருக்குர்ஆன் ஆகும். அல்லாஹ் இறையச்சம் உடையவர்களின் அடையாளங்களில் இந்த ஒரு அடையாளத்தையும் வைத்துள்ளான். அதாவது, அல்லாஹ் இறையச்சமுடையவரை உலக அருவருப்புகளிலிருந்து விடுவித்து அவருடைய பணிகளுக்குத் தானே பொறுப்பேற்கின்றான்."

இப்பொழுது நான் வக்ஃபே ஜதீத் தொடர்பாக பேச இருக்கின்றேன். ஆகையால் வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தியதால், அல்லாஹ் தம் மீது அருள் புரிந்த மக்கள் அல்லது தியாகம் செய்தால் அல்லாஹ் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவான் என்கின்ற உறுதியான நம்பிக்கையும், ஈமானும் கொண்டிருந்த மக்கள் ஆகியோருடைய சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன்.

*இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இந்தோனேஷியா, கென்யா, கஸாக்கிஸ்தான் மற்றும் இன்னும் சில நாடுகளின் பொருள் தியாகம் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்:-*

இந்தியாவிலிருந்து அங்குள்ள வக்ஃபே ஜதீத் இன்ஸ்பெக்டர் எழுதுகின்றார்கள்: ஒரு ஜமாஅத்தின் ஒரு நண்பரிடம் சென்றார்கள். அவருடைய வக்ஃபே ஜதீத் சந்தா 16 ஆயிரம் ரூபாய் பாக்கி இருந்தது. அவர் தன்னுடைய ஒரு மிக முக்கியமான தவணையை செலுத்த வேண்டியிருந்தது. நாங்கள் சென்றவுடன் அவர் எங்களிடம், 'என்னுடைய EMI தவணையை செலுத்த வேண்டியதுள்ளது. அதையோ பிறகு பார்க்கலாம். அதைத்தான் செலுத்த வேண்டும். அதை நான் பிறகு செலுத்துவேன். இப்பொழுது என்னுடைய பாக்கி இருக்கின்றது. நீங்களும் என்னிடம் வந்து விட்டீர்கள். எனவே, நான் முதலில் சந்தா பாக்கியை செலுத்தி விடுகிறேன்' என்று கூறினார்.

நாங்கள் அவரிடம், 'நீங்கள் கஷ்டத்தில் இருக்கின்றீர்கள். இப்பொழுது நீங்கள் பாதி கொடுங்கள். மீதம் பிறகு கொடுத்து விடுங்கள்' என்று கூறினோம். அதற்கு அவர், 'முதலில் அல்லாஹ்வுக்காக கொடுக்க வேண்டும். மற்ற விவகாரங்களை அல்லாஹுத்தஆலா சிறப்பாக்கி விடுவான். இன்ஷா அல்லாஹ். நான் இறையச்சத்தின் படி செயல்படுகிறேன் என்றால், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறேன் என்றால், அல்லாஹ் சிறந்த ஏற்பாட்டை செய்வான். பிறகு அவர் ஃபோன் மூலமாக அவர்களுக்குத் தகவல் தெரிவித்தார். ஒரு தொகை நீண்ட காலமாக நிலுவையில் இருந்தது. அது எனக்கு இவ்வளவு விரைவாக கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாமல் இருந்தது. அது திடீரென்று கிடைத்துவிட்டது. இவ்வாறு சந்தாவின் அருளினால் அல்லாஹ் என்னுடைய அனைத்துப் பணிகளையும் நிறைவேற வைத்து விட்டான். என்னுடைய ஈமானும் அதிகரித்தது. தியாகம் செய்யக்கூடியவர்களுடன் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை நான் பார்த்தேன்.

*வக்ஃபே ஜதீத் எனும் பொருள் தியாகப் போரில் தியாகம் செய்யக்கூடிய கலப்பற்ற மக்களின், ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பல்வேறு சம்பவங்களையும், அவர்கள் மீது பொழிந்த இறைவனின் அசாதாரணமான அருட்கள் பற்றியும் எடுத்துக் கூறிய பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் நாடுகள் மற்றும் ஜமாஅத்களின் தரவரிசைகளை எடுத்துக் கூறினார்கள்.*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் இந்த நிகழாண்டில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக ஏறத்தாழ 15 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை கடந்த ஆண்டைவிட 1.3 மில்லியன் பவுண்ட் அதிகமாகும்.

**வசூல் அடிப்படையில் உலகம் முழுவதிலும் உள்ள முதல் 10 ஜமாஅத்கள்:** பிரிட்டன், கனடா, ஜெர்மனி, அமெரிக்கா, **இந்தியா**, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கின் ஒரு ஜமாஅத், இந்தோனேஷியா, மத்திய கிழக்கின் ஒரு ஜமாஅத் மற்றும் பெல்ஜிம்.

**ஆப்பிரிக்காவின் முதல் 10 ஜமாஅத்கள்:** கானா, மொரிஷியஸ், புர்கினாஃபாஸோ, தான்ஸானியா, நைஜீரியா, லைபீரியா, கேம்பியா, சிராலியோன், பெனின், மற்றும் மாலி.

**பங்கேற்பாளர்களை அதிகரித்த வகையில் முன்னணி வகிக்கும் ஜமாஅத்கள்:** நைஜீரியா, நைஜர், கேம்பியா, கினிபிஸாவ், கோங்கோ பிராஸ்வில், ஐவரி கோஸ்ட், மத்திய ஆப்பிரிக்கா மற்றும் கோங்கோ கின்ஷாசா.

**இந்தியாவின் முதல் 10 மாநிலங்கள்:** கேரளா, **தமிழ்நாடு**, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, கர்நாடகா, ஒடீஷா, பஞ்சாப், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம்.

**இந்தியாவின் முதல் 10 ஜமாஅத்கள்: கோயம்புத்தூர்**, ஹைதராபாத், காதியான், காலிகட், **மேலப்பாளையம்**, பெங்களூர், மஞ்சேரி, கொல்கத்தா, கேரங் மற்றும் கருளாயீ.

அல்லாஹுத்தஆலா தியாகம் செய்த இந்த அனைவரின் செல்வங்களிலும் ஆன்மாக்களிலும் அளவற்ற பரகத்துகளை வழங்குவானாக. நான் ஏன் சில ஜமாஅத்களின் பெயர்களை வாசிக்கிறேன் என்றால், எங்களுடைய தரவரிசை என்ன என்பது எங்களுக்கு சொல்லப்பட வேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். எனவே, வழக்கத்தின்படி வாசிக்கப்படுகின்றன.

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளின் ஒளியில் கூறினார்கள்:*

எனவே இது அல்லாஹ்வுடைய சிறப்பான அருளாகும். எவ்வாறு அல்லாஹ் மக்களுக்கு வழங்கிக் கொண்டே செல்கின்றான் என்பதை நாம் அனுபவித்தும் இருக்கிறோம். ஏனென்றால் அல்லாஹ்விடமே அனைத்துக் கருவூலங்களும் இருக்கின்றன. அவன் மறுமையில் அதிலிருந்து அவர்களுக்கு வழங்குவான் என்பதை அவர்கள் புரிகின்றார்கள். அல்லாஹ் எதிர்காலத்தில் நமக்கு பொருள் தியாகத்திற்கான நல்வாய்ப்பு வழங்குவதுடன், நம்முடைய ஈமானையும் நம்பிக்கையும் அதிகரித்துக் கொண்டே சொல்வானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ

اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ

يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: முரப்பி ஸாஹிர் ஹுஸைன்)